# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 01 (PW–01)** |
| **பெயர்** | :– | **ஷபிக் அகமது புகாரி** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **அப்துல் வகாப் புகாரி** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜுன்திங்கள் 18 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், வெள்ளிப்பாளையம் ஊரில் வசிக்கிறேன். இறந்துபோன மணியை தெரியும். அவர் எனக்கு நண்பர். நான் பழைய Car வாங்கி உதிரி பாகங்களாக பிரித்து விற்கும் வேலை செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியாது. 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நாள் Car வாங்குவதற்காக சேலம் 5 சாலையில் இருந்து சற்று தூரம் உள்ளே இருக்கும் workshop ஒன்றிற்கு நான், என் நண்பர் ஆரிஸ் ஆகியோர் சென்றோம். மாலை சுமார் 4.30 மணி இருக்கும். அங்கு சுமார் 20 ஆட்களுக்கு அதிகமாக இருந்தனர். அங்கு பழைய Car உள்ளது என்று எனக்கு தரகர்தான் தகவல் சொன்னார். அவர் பெயர் எனக்கு தற்போது நினைவில்லை. நான் அங்கு Car பார்த்துக்கொண்டிருந்தபோது வெளியில் ஒருவரை கொன்றுவிட்டதாக சொன்னார்கள். என்ன நடந்தது என்று நான் பார்க்க சென்றபோது அந்த இடத்திலிருந்து கூட்டம் எங்களை நோக்கி ஓடிவந்தது. அவர்களுடன் பேசிவிட்டு நாங்கள் பயந்துகொண்டு அங்கிருந்து ஊருக்கு செல்வதற்காக சென்றுவிட்டோம். அங்கிருந்து வெளியே வந்தபோது ஹரிஷ்க்கு வாந்தி வந்தது. அவர் அங்கிருந்து புறப்பட்டு மேட்டுப்பாளையத்திற்கு சென்று-விட்டார். நான் சேலம் தொடர்வண்டி சந்திப்பு பகுதியிலுள்ள பள்ளிவாசலில் ஓதும் என் தம்பி இருசாத் அகமதுவை பார்க்க சென்றேன்.

அன்று இரவு காவல் துறையினர் என்னை கைபேசியில் அழைத்து காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள். நான் அங்கு சென்ற பிறகு மணி என்பவரை தெரியுமா என்று கேட்டார்கள். தெரியும் என்று சொன்னேன். அவர் இறந்துவிட்டார் என்றும் அதற்காக புகார் கொடுங்கள் என்றும் என்னிடம் கேட்டார். இறந்துபோனவரின் மனைவி உள்ளிட்ட உறவினர்கள் புகார் வாங்கலாமே என்று சொன்னேன். அதற்கு காவல் நிலையத்தில் நீங்கள்தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் நான் புகார் கொடுத்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகாரில் என் கையொப்பம் உள்ளது. புகார் **அ.சா.ஆ–01** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

கொலையுண்ட மணியை எனக்கு 5 ஆண்டுகளாக தெரியும் என்றால் அவர் எனது நண்பர். என் மீது ஈரோடு மாவட்டத்தில் கொலை வழக்கு இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்தபோதுதான் மணி எனக்கு பழக்கம் என்றால் சரிதான். மணி வீட்டுமனை வணிக தொழிலும் பழைய Car வாங்கி விற்கும் தொழிலும் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பழைய வாகனம் விலைக்கு இருப்பதாக அவர் சொன்னார் என்றும் நான் நேரடியாக வருகிறேன் என்று நீங்கள் சொன்னீர்கள் என்றும் அதன் தொடர்ச்சியாகத்தான் 25.04.2016 ஆம் தேதியன்று நீங்கள் சேலத்திற்கு வந்தீர்கள் என்றும் சொன்னால் இல்லை.

நான் சென்ற work shop இன் பெயர் ஜென் என்றால் எனக்கு தெரியவில்லை. மணிதான் உங்களை அழைத்து சென்றார் என்றால் இல்லை. மணி கைபேசியில் பேசிக்கொண்டே கோபமாக அவரது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வெளியே சென்றார் என்றால் இல்லை. அவர் சென்ற சிறிது நேரத்தில் அவரை சிலர் துரத்திக்கொண்டு வந்தனர் என்றும் மணியின் கையில் வெட்டுப்பட்டிருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. மணி நான் சொன்ன Workshop இருக்கும் இடத்தில் விழுந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அவரை துரத்திக்கொண்டு வந்தவர்கள் மணியை பலமுறை பல உறுப்புகளில் வெட்டினார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. அங்கு இருந்த நான் உட்பட பலர் அவர்களை பிடிக்க முற்பட்டபோது அருகில் வந்தால் வெட்டிவிடுவோம் என்று

சொல்லிவிட்டு சென்றனர் என்றால் நான் பார்க்கவில்லை. நான்தான் பள்ளப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மணியை வெட்டியவர்கள் எதிரிகள்தான் என்று புலனாய்வின்போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடந்தது சம்பந்தமாகவும் புகார் கொடுத்தது சம்மந்தமாகவும் புலனாய்வின்போது உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கைபேசிக்குதான் காவல் நிலையத்தினர் அழைத்தனர். எனக்கு சொந்த ஊர் மேட்டுப்பாளையமாக உள்ள நிலையில் காவல் துறையினருக்கு என் கைப்பேசி எண் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் நான்தான் தன்னிச்சையாக புகார் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை. காவல் துறையினர் என்னை சுமார் ஓராண்டு கழித்து அழைத்து விசாரித்தனர்.

Sd/- V. Pugazhenthi,
III Additional District&Session Judge,
Salem.